<u>சுருக்கம்</u>

மாற்றுத் திறனாளிகள் நலன் – பல்வகை குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பினமாக 1500 பேருக்கு கூடுதலாக இலவச மடக்கு சக்கர நாற்காலிகள் வழங்க 2010–11ம் ஆண்டிற்கு ரூ.90.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந. 2)த் துறை

அரசாணை(நிலை) எண். 40 நாள்: 12–07– 2010

ஆனி 28, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. 13.5.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள்.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் எண். 5014/இவாததி.1/2010, நாள் 2.6.2010.

-----

<u>ஆணை:</u>

13.5.2010 அன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மீதான மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவித்தார்கள்.

**“ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடு உடைய மாற்றுத் திறனாளிகள் மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 150 பேருக்கு ஒவ்வொரு ஆண்டும் மடக்கு சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சிறப்பினமாக அதிக மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் 1500 பேருக்கு இலவசமாக மடக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்படும்”.**

2. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் கை கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை 3,53,798 ஆகும். இவர்களில் இதுவரை 13,862 பல்வகை குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும், 22,116 மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், இவர்கள் கல்வி / பயிற்சி பெறும் நிறுவனங்களிலோ, தங்கியுள்ள விடுதியிலோ, இல்லங்களிலோ ஒரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு சென்று வருவதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு இவர்களது உபயோகத்திற்கு சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கப்பட்டு வந்தது என்றும், இந்த சக்கர நாற்காலிகளின் எடை அதிகமாக இருந்ததினாலும், இரயில் மற்றும் பேருந்துகளில் வெளியூர்களுக்கு எடுத்து சென்று பயன்படுத்துவதில் சிரமம் இருந்ததைக் கருத்தில் கொண்டும் 2008–2009ம் ஆண்டு முதல் மடக்கு சக்கர நாற்காலிகள் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருவதாக மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

| நிதியாண்டு | வழங்கப்பட்ட சக்கர நாற்காலிகள் எண்ணிக்கை | மடக்கு சக்கர நாற்காலி ஒன்றின் மதிப்பு | மொத்த மதிப்பு |
|---|---|---|---|
| **2008–09** | **122** எண்ணிக்கை | ரூ. **4,700/–** | ரூ. **5,73,400/–** |
| **2009–10** | **158** எண்ணிக்கை | ரூ.**4,450/–** | ரூ.**7,03,100/–** |

**3.** மடக்கு சக்கர நாற்காலிகள் கேட்டு விண்ணப்பம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், அதிக அளவில் பயனாளிகளுக்கு மடக்கு சக்கர நாற்காலிகள் வழங்குவதன் மூலம் முடங்கிக் கிடக்கும் மாற்றுத் திறனாளிகள் வெளியுலகத்தோடு தொடர்பு கொண்டு சமுதாய வாழ்வில் பங்கேற்க வழிவகுக்கும் என்றும், இரயில் மற்றும் பேருந்துகளில் வெளியூர்களுக்கு செல்லும் மாற்றுத் திறனாளிகளின் குடும்பத்தார் இச்சக்கர நாற்காலியினை மடக்கி வைத்து வெளியூர்களுக்கு மாற்றுத் திறனாளிகளையும் உடன் அழைத்துச் செல்ல பயன்படும் என்றும், மடக்கு சக்கர நாற்காலி உதவியுடன் கல்வி பயில்வது, உணவு உண்பது போன்ற தங்களது அன்றாட செயல்களைச் சுயமாக செய்து கொள்ள உதவியாக இருக்கும் என்றும், கான்பூரில் அமைந்துள்ள இந்திய செயற்கை அவயம் தயாரிப்புக் கழகம் (Artificial Limb Manufacturing Corporation of India Limited, (ALIMCO) என்ற மத்திய அரசு நிறுவனம் இந்திய தரக்கட்டுப்பாடு நிறுவனத்தின் (ISI) தரத்துடன் மடக்கு சக்கர நாற்காலி ஒன்றின் விலை ரூ.**6,000/–** என்ற அளவில் நிர்ணயித்து தயாரித்து வழங்கி வருவதால் மத்திய அரசு நிறுவனம் அல்லது பிற தனியார் நிறுவனங்களிடமிருந்து திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் **1500** மடக்கு சக்கர நாற்காலிகளைக் கொள்முதல் செய்வதற்கு ரூ.**90.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டு கொண்டுள்ளார்.

**4.** மேலும் உத்தேச செலவுத் தொகையினை காட்டிலும் மடக்கு சக்கர நாற்காலியின் விலை குறைவாக இருப்பின், அரசின் எஞ்சிய நிதி ஒதுக்கீட்டுத் தொகைக்கு ஏற்ப மடக்கு சக்கர நாற்காலிகளைக் கூடுதலாக வாங்கிடவும், உத்தேச செலவினைக் காட்டிலும் மடக்கு சக்கர நாற்காலியின் விலை அதிகமாக இருப்பின் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்குள் எவ்வளவு எண்ணிக்கை வாங்க இயலுமோ அதற்கேற்ப வாங்கிடவும் அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**5.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவைக் கவனமாக பரிசீலனை செய்த பின்பு அதனை ஏற்று **2010–11** ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகள் **1500** நபர்களுக்கு **1** மடக்கு சக்கர நாற்காலி ரூ.**6,000/–** வீதம் வாங்க ஏற்படும் செலவினம் ரூ. **90.00** இலட்சம் (ரூபாய் தொண்ணூறு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**6.** மேலே பத்தி 5இல் வழங்கியுள்ள ஆணைப்படி மடக்கு சக்கர நாற்காலி வாங்க கீழ்க்காணும் நிபந்தனைகளை பின்பற்றுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

1. மடக்கு சக்கர நாற்காலிகளை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** மற்றும் விதிகள் **2000**–ன்படி திறந்த ஒப்பந்த புள்ளி மூலம் கொள்முதல் செய்திட அனுமதிக்கப்படுகிறது.
2. ஒரு மடக்கு சக்கர நாற்காலியின் விலை ரூ. **6,000/–**க்கு மிகாமல் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.